**World Christian Fellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com

# அப்போஸ்தலர்கள் - பேதுரு 03 – நல்ல குணாதிசயம்

# லூக்கா 6:12-16

***லூக்கா 6:12-16, அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி: ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார். அவர்கள் யாரெனில், பேதுரு என்று தாம் பேரிட்ட சீமோன், அவன் சகோதரனாகிய அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, செலோத்தே என்னப்பட்ட சீமோன், யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே.***

***பொதுவானத் தகவல்கள்:***

*இவர்கள் அனைவரும் சாதாரணமான மனிதர்கள்.*

*யூதாஸைத் தவிர்த்து, மற்ற அனைவரும் கலிலேயாவைச் சேர்ந்தவர்கள். யூதாஸ் மட்டும் தெற்கிலுள்ள கீரியோத் என்னும் பட்டணத்தைச் சேர்ந்தவன்.*

*இவர்கள் அனைவரும் இஸ்ரவேலின் கண்டுகொள்ளப்படாத கிராமப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.*

- *இவர்களில் யாரும் பரிசேயரில்லை.*
- *இவர்களில் யாரும் சதுசேயரில்லை.*
- *இவர்களில் யாரும் ஆசாரியரில்லை.*
- *இவர்களில் யாரும் வேதபாரகரில்லை.*
- *இவர்களில் யாரும் புகழ்பெற்ற நபர்களுமில்லை.*

*எல்லோரும் சாதாரணமான மனிதர்களே.*

*அதில் நான்குபேர் மீனவர்கள், ஒருவன் ஆயக்காரன், ஒருவன் தீவிரவாதி, மற்றவன் காட்டிக்கொடுத்த துரோகி.*

*புதிய ஏற்பாட்டின் நான்கு இடங்களில் அப்போஸ்தலர்களின் பெயர் பட்டியல்கள் இடம்பெற்றுள்ளது.*

*மத்தேயு, மாற்கு, லூக்கா, மற்றும் அப்போஸ்தலர் நடபடிகள்.*

***மத்தேயு 10, மாற்கு 3, லூக்கா 6, மற்றும் அப்போஸ்தலர் 1.***

*இந்தப் பெயர் பட்டியல்கள் ஒவ்வொன்றிலும் பன்னிரண்டு பேர்களின் பெயர்களும் இடம் பெற்றுள்ளது. ஆகையினால் அந்த பன்னிருவரும் யார் என்று நாம் அறிந்துகொள்ள முடியும். ஆனால் பட்டியலின் பெயர்களில் இடமாற்றம் உள்ளது.*

*இந்த நான்கு பெயர் பட்டியல்களிலும் பேதுருவின் பெயர் தான் முதலாவதாக இடம்பெற்றுள்ளது.*

*ஒவ்வொன்றிலும் நான்குபேர் கொண்ட மூன்று குழுவினர்களாய் அப்போஸ்தலர்கள் பிரிக்கப் பட்டுள்ளனர்.*

- முதல் குழுவினர்
- இரண்டாம் குழுவினர்
- மூன்றாம் குழுவினர்

***முதல் குழுவினர்:***

1. சீமோன் என்னும் பேதுரு
2. அந்திரேயா
3. யாக்கோபு
4. யோவான்

பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானின் பெயர்கள் பட்டியலில் மாறிமாறி இடம்பெற்றுள்ளது. பேதுருவின் பெயர் எல்லாவற்றிலும் முதலில் இடம்பெறுகிறது. ஆனால் இவர்களின் பெயர்கள் எப்போதுமே முதல் குழுவாகவே கருதப்படுகிறது.

***இரண்டாம் குழுவினர்:***

1. பிலிப்பு
2. பர்த்தொலொமேயு (அ) நாத்தான்வேல்
3. மத்தேயு
4. தோமா

இந்த இரண்டாவது குழுவும் எல்லா பட்டியலிலும் இடம்பெற்றுள்ளது.

பிலிப்பு, பர்த்தொலொமேயு, மத்தேயு மற்றும் தோமா ஆகிய நால்வரின் பெயர்கள் அடிக்கடி இடம் மாறி இடம்பெற்றாலும், இந்த இரண்டாம் குழுவில் பிலிப்புவின் பெயரே எப்போதும் முதலாவதாக இடம்பெறுகிறது.

***மூன்றாம் குழுவினர்:***

*1. அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு*

*2. செலோத்தே என்னப்பட்ட சீமோன்*

*3. யாக்கோபின் குமாரனாகிய யூதாஸ்*

*4. யூதாஸ்காரியோத்து*

*எல்லா பட்டியலிலும் ஒன்றுபோலவே இடம்பெறுகிறது. நடுவில் இருக்கும் செலோத்தே என்னப்பட்ட சீமோன் மற்றும் யாக்கோபின் குமாரனாகிய யூதாஸ் ஆகிய இருவரின் பெயர்களும் அவ்வப்போது இடம் மாறி இடம்பெறுகிறது.*

*ஆனால் அப்பேயுவின் குமாரனாகிய யாக்கோபின் பெயர் முதலிலும் யூதாஸ்காரியோத்தின் பெயர் கடைசியிலும் இடம்மாறாமல் இடம்பெற்றுள்ளது.*

***இதிலிருந்து என்ன நாம் கற்றுக்கொள்ளுகிறோம்?***

*எல்லோருக்கும் தலைவனாய் கருதப்பட்ட பேதுருவின் பெயரே எல்லாப் பட்டியல்களிலும் முதல் இடத்தை ஆக்கிரமிக்கிறது.*

*இந்த நான்குபேர் கொண்ட குழுக்கள் கிறிஸ்துவோடுள்ள நெருக்கத்தில் வித்தியாசப்படுகின்றனர்.*

*முதல் குழுவினர் எப்போதும் இயேசுவுக்கு நெருக்கமாகவே இருந்தனர்: பேதுரு, யாக்கோபு, யோவான் மற்றும் அந்திரேயா.*

*இந்த குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் தலைவர்கள் உள்ளனர் என்பதையும் நாம் அறியமுடிகிறது.*

- *முதல் குழுவின் தலைவர், பேதுரு.*

- *இரண்டாம் குழுவின் தலைவர், பிலிப்பு.*
- *மூன்றாம் குழுவின் தலைவர், அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு.*

*தலைவர்களுக்கெல்லாம் தலைவராக பேதுரு நியமிக்கப்பட்டிருந்தார்.*

### ***சீமோன் பேதுரு***

*பேதுரு, செய்திக்காய் மனிதனைச் சார்ந்திருக்க வேண்டியதில்லை, தேவனிடத்திலிருந்தே தனக்கு செய்தி வருகிறது என்பதை தன்னுடைய அனுபவத்தின் மூலம் கற்றுக்கொண்டான்.*

*தேவன் தன்னை இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் பயன்படுத்துவார் என்பதையும் அனுபவங்களின் மூலம் கற்றுக்கொண்டான். இராஜ்ஜியத்தின் திறவுகோல் அவனிடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அவன் தன்னுடைய வாழ்க்கையையும் செய்தியையும் கொண்டு தேவனுடைய ராஜ்யத்தைத் திறந்து ஆண்களையும் பெண்களையும் உட்பிரவேசிக்கச் செய்யமுடியும்.*

*மாம்ச ரீதியாய் அவன் பெலவீனன் என்றும், தன்னுடைய சுய பெலத்தையும் சுய தீர்மானத்தையும் நம்பி ஒன்றும் செய்யமுடியாது என்பதையும் அனுபவத்தில் கற்றுக்கொண்டான்.*

## ***சரியான குணம்***

*குணாதிசயம், மற்றவர்களிடத்தில் மதிப்பைத் தேடித் தருகிறது.*
*மதிப்பு, மக்கள் நம் மீது நம்பிக்கை வைக்கச் செய்கிறது.*

*நம்பிக்கை, மக்கள் உங்களை பின்பற்றும்படி செய்கிறது. குணாதிசயம் தலைமைத்துவத்திற்கு தகுதிப் படுத்துகிறது. சீரான தலைமைத்துவத்தை சாத்தியமாக்குகிறது. நல்ல குணங்கள் இல்லையென்றால், நீ தலைவனாக மாறவே முடியாது.*

## ***மாம்சீக தலைமைத்துவம்:***

*''நம்பிக்கை, மரியாதை, சுயநலமில்லாதிருத்தல், தாழ்மை, சீரான எண்ணம், சுய ஒழுக்கம், சுய கட்டுப்பாடு, தைரியம்.''*

*இந்த நற்குணங்களெல்லாம் ஒரு தலைவனிடம் இருக்கவேண்டும் என்று சமுதாயம் எதிர்பார்க்கிறது. இவைகள் தேவனுடைய சாயலை நேர்த்தியாய் பிரதிபலிக்கிறது.*

*இவைகளெல்லாம் தேவனுடைய மற்றும் கிறிஸ்துவுடைய குணாதிசயங்களாய் இருப்பதால் இவைகள் அனைத்தும் தேவ சாயலையே பிரதிபலிக்கிறது.*

- *கிறிஸ்து பூரண நம்பிக்கைக்குரியவர்,*
- *கிறிஸ்து பூரண கனத்திற்குரியவர்,*
- *கிறிஸ்து பூரண சுயநலமற்றவர்,*
- *கிறிஸ்து பூரண தாழ்மையுள்ளவர்,*
- *கிறிஸ்து பூரண சீரான சிந்தைகொண்டவர்,*
- *கிறிஸ்து பூரண சுய ஒழுக்கமுள்ளவர்,*
- *கிறிஸ்து பூரண சுய கட்டுப்பாடுள்ளவர்,*
- *கிறிஸ்து பூரண தைரியமானவர்,*
- *கிறிஸ்து பூரண நேர்மையானவர்.*

*மனிதனின் தூய்மையான, உயர்ந்த மற்றும் நேர்மையான குணாதிசயங்கள் கிறிஸ்துவில் பிரதிபலித்த தேவனுடைய குணாதிசயங்களாய் இருக்கிறது.*

எனவே ஒருவன் ஆவிக்குரிய தலைவனாயிருக்க விரும்பினால், மக்களை கிறிஸ்துவைப்போல் மாற்றுவதே அவனுடைய பிரதான குறிக்கோளாய் இருக்கும். மக்களை கிறிஸ்துவைப்போல் மாற்றுவதற்கு ஒருவன் தன்னை முன்மாதிரியாய் வைத்து, எந்தெந்த சுபாவங்கள் கிறிஸ்துவை பிரதிபலிக்குமோ, அவைகளை தன்னில் வெளிப்படுத்தவேண்டும்.

எனவே தான், மூப்பர்கள் போன்று திருச்சபையின் தலைமைப்பொறுப்புகளில் இருப்பவர்களிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு தேவ மனிதனுக்கு இருக்கவேண்டிய குணாதிசயங்கள் 1 தீமோத்தேயு 6ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலக்கு பெரிதாயிருப்பதால், தகுதி அளவும் பெரிதாகவே இருக்கிறது.

கிறிஸ்துவைப்போல் மாறுவதே ஆவிக்குரிய தலைமைத்துவத்தின் ஆவிக்குரிய இலக்கு.

- உலக தலைமைத்துவம் தன்னம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது.
- ஆவிக்குரிய தலைமைத்துவமோ, சுயத்தை நம்பாமல் தேவன் மீது நம்பிக்கை வைக்க எதிர்பார்க்கப்படுகிறது.

- உலக தலைமைத்துவத்திற்கு மக்களை நன்கு அறிந்தவர்களை நாம் எதிர்பார்க்கிறோம்.
- ஆவிக்குரிய தலைமைத்துவத்திற்கோ, தேவனை நன்கு அறிந்தவர்கள் தேவைப்படுகிறார்கள்.

- உலக தலைமைத்துவத்திற்கு நன்றாய் தீர்மானம் எடுக்கக்கூடிய நபர்களை எதிர்பார்க்கிறோம்.
- ஆவிக்குரிய தலைமைத்துவத்திற்கோ, தேவ சித்தத்தை அறிய விரும்புகிற ஒரு நபரை எதிர்பார்க்கிறோம்.
- உலக தலைமைத்துவத்திற்கு லட்சியத்தோடு செயல்படக்கூடிய நபரை எதிர்பார்க்கிறோம்.
- ஆவிக்குரிய தலைமைத்துவத்திற்கோ, தேவ நாமத்தை மகிமைப்படுத்துவதை குறிக்கோளாய் கொண்டு செயல்படுபவர்களை எதிர்பார்க்கிறோம்.
- உலக தலைமைத்துவத்திற்கு தன்னுடைய திட்டங்களையும் யுக்திகளையும் நேர்த்தியாய் செயல்படுத்தக்கூடிய நபரை எதிர்பார்க்கிறோம்.
- ஆவிக்குரிய தலைமைத்துவத்திற்கோ, தேவனுடைய வார்த்தையை புரிந்து அதற்கு கீழ்படிகிற நபரை எதிர்பார்க்கிறோம்.
- உலக தலைமைத்துவத்திற்கு மற்றவர்களுக்கு கட்டளையிடும் அதிகாரத்தைச் செயல்படுத்தக்கூடிய நபரை எதிர்பார்க்கிறோம்.
- ஆவிக்குரிய தலைமைத்துவத்திற்கோ, மற்றவர்களுக்கு உதவிசெய்து, காலியிடங்களை நிரப்புவதற்கு எப்போதும் ஆயத்தமாயிருக்கிற நபரை எதிர்பார்க்கிறோம்.
- உலக தலைமைத்துவத்திற்கு மற்றவருடைய வெற்றியைக் கொண்டு தங்களை உற்சாகப்படுத்திக்கொள்ளுகிற நபர்களை எதிர்பார்க்கிறோம்.
- ஆவிக்குரிய தலை\மைத்துவத்திற்கோ, தேவனுடைய அன்பினால் ஏவப்படுகிற நபர்களை எதிர்பார்க்கிறோம்.

- *உலக தலைமைத்துவத்திற்கு சுயமாய் காலூன்றி நிற்பவர்களை எதிர்பார்க்கிறோம்.*
- *ஆவிக்குரிய தலைமைத்துவத்திற்கோ, தேவனை முற்றிலும் சார்ந்துகொள்ளுகிறவர்களை எதிர்பார்க்கிறோம்.*

*பொதுவான தலைமைத்துவத்தைக் குறித்து நாம் படிக்கப்போவதில்லை.*

*தேவனுக்கான தலைவனாயிருப்பதற்கு சில இயற்கையான மூலப்பொருட்கள் தேவைப்படுகிறது. பேதுருவுக்கு அவைகள் அனைத்தும் இயல்பாகவே இருந்தது. எனினும், அவற்றை ஆவிக்குரிய தலைமைத்துவமாய் மாற்றுவதற்கு சில தீவிர நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருந்தது. அது அனுபவத்தின் மூலமாகவும் நல்ல குணாதிசயங்களை வளர்த்துக்கொள்வதின் மூலமாகவுமே சாத்தியமானது.*

*ஆவிக்குரிய தலைமைத்துவத்திற்கு மற்றெல்லாவற்றைக் காட்டிலும் குணாதிசயங்கள் மிகவும் அவசியம்.*

*இது ஆவிக்குரிய தலைமைத்துவத்திற்கு மிகவும் அவசியம். ஏனெனில் கிறிஸ்துவைப் போல் மாறுவதே அதின் இலக்கு. எவனொருவன் ஜனங்களை கிறிஸ்துவைப்போல் மாற்றப் பிரயாசப்படுகிறானோ அவன் நல்ல குணாதிசயங்களை உடையவனாகவே இருக்கவேண்டும்.*

*“கல்லறையில் துக்கங்கொண்டாடுகிறவர்கள், அடக்கம் பண்ணாமல் திரும்பிக்கொண்டுவருவது, மரித்தவரின் நல்ல குணாதிசயங்களை மட்டுமே. அவர் யார் என்பதே தொடர்ந்து உயிர்வாழும், அதை அடக்கம் செய்யமுடியாது.”*

J.R. *மில்லர்.*

*நீ மரித்தபின்பு மக்கள் உங்களைக் குறித்து என்ன நினைப்பார்கள் என்பதைப் பொருட்படுத்தவேண்டும். அதேநேரத்தில், நாம் உயிரோடு இருக்கும்போது மக்கள் நம்மைக் குறித்து என்ன நினைக்கிறார்கள் என்பதையும் பொருட்டாய் எண்ணவேண்டும்.*

பேதுருவைக் குறித்து தேவனுக்கு ஒரு திட்டம் உண்டு. தேவன் தன்னை பயன்படுத்தவேண்டும் என்று பேதுரு விரும்பினான். ஆனால் தேவனுக்குப் பயன்படுகிற மனிதனாய் மாறுவதற்கு பல்வேறு காரியங்கள் பேதுருவுக்கு அவசியப்பட்டது. நற்குணாதிசயங்களை வளர்த்துக்கொள்வது அதில் முக்கியமான ஒன்று.

## *1. அடிபணிதல்*

*ஆவிக்குரிய தலைமைத்துவத்திற்கு அடிபணிதல் அவசியம்.*

*உலக விளக்கத்திற்கு அது முரண்பாடானது.*

*ஒரு உலக தலைவன் அதிகாரத்தைச் செயல்படுத்துகிறவனாய் இருக்கவேண்டும்.*

*ஆவிக்குரிய வட்டாரத்தில் கீழ்படிதலைக் கற்பது அவசியம். ஏனென்றால், ஆவிக்குரிய தலைவனாய் நாம் எதைச் செய்தாலும் அதை தேவனுக்கு அடிபணிந்து செய்ய வேண்டும்.*

- தேவனுக்கு அடிபணிதல்,
- தேவனுடைய வார்த்தைக்கு அடிபணிதல்,
- தேவனுடைய திட்டத்திற்கு அடிபணிதல்,
- பரிசுத்த ஆவியானவருக்கு அடிபணிதல்,
- தேவனுடைய நோக்கத்திற்கு அடிபணிதல்.

*தலைவர்கள் மனவுறுதியுள்ளவர்களாய் இருக்கவேண்டும். வெளிப்படையாய் இருக்கவேண்டும். ஆர்வமுள்ளவர்களாய் இருக்கவேண்டும். கடினமாய் நடந்துகொள்ளவேண்டும். அதிகாரம் செலுத்த வேண்டும். பேதுருவுக்கு இவைகள் அனைத்தும் இருந்தது. பேதுரு படபடவென்று பேசுவான். அவசரமாய் செயல்படுவான். அவர் ஒரு பொறுப்பில் நியமிக்கப்பட்ட நபர். சரியோ, தவறோ, காளையை அதின் கொம்பைப்பிடித்து நிறுத்தக்கூடியவன். இயேசு அவனுக்கு அடிபணிதலின் பாடத்தைக் கற்பிக்கவேண்டியிருந்தது.*

*அடிபணிதலின் பாடத்தைக் கற்றுக்கொள்ள அவனுக்கு பல வழிகள் இருந்தது.*

***மத்தேயு 17:24, அவர்கள் கப்பர்நகூமில் வந்த போது, வரிப்பணம் வாங்குகிறவர்கள் பேதுருவினிடத்தில் வந்து: உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்துகிறதில்லையா என்று கேட்டார்கள்; செலுத்துகிறார் என்றான்.***

*கப்பர்நகூமே இயேசுவின் கலிலேயா ஊழியத்திற்கு தலைமைச்செயலகமாய் செயல்பட்டது. பேதுருவுக்கும் அந்திரேயாவுக்கும் பிறப்பிடமும் இந்த கப்பர்நகூமே.*

*இரண்டு வெள்ளிப்பணம் என்பது இரண்டு நாள் கூலி. வரிப்பணமாய் செலுத்தப்படவேண்டியது.*

***மத்தேயு 17:25, அவன் வீட்டிற்குள் வந்தபோது, அவன் பேசுகிறதற்கு முன்னமே இயேசு அவனை நோக்கி: சீமோனே, உனக்கு எப்படித் தோன்றுகிறது? பூமியின் ராஜாக்கள் தீர்வையையும் வரியையும் தங்கள் பிள்ளைகளிடத்திலோ, அந்நியரிடத்திலோ, யாரிடத்தில் வாங்குகிறார்கள் என்று கேட்டார்.***

*இது பேதுருவுக்கு பிரச்சனையாயிருந்தது. அவர்கள் ரோமர்களை வெறுத்தனர். ரோமர்களின் வரிவசூலிக்கும்*

*செய்கையை வெறுத்தனர். விக்கிரக ஆராதனைக் காரர்களாகிய ரோமர்களுக்கு வரி செலுத்துவது அவர்களுக்கு தவறாய் தோன்றினாலும், மகிமையின் தேவனும், தேவ குமாரனுமாயிருக்கிற இயேசு ரோமர்களுக்கு வரி கட்டியது பேதுருவுக்கு ஆச்சரியமாய் இருந்திருக்கும்.*

*ஆகையினால், பேதுருவுக்கு அந்த செய்கையை ஆமோதிப்பது சற்று கடினமாகவே இருந்திருக்கும்.*

*ரோம ராஜ்யத்திற்கு நாம் உட்படாதபோது, அதாவது உலக ராஜ்யத்திற்கு நாம் உட்படாதபோது, ஏன் நாம் வரிகட்டவேண்டும்?*

*இயேசுவே என் ராஜா, நான் ராஜாவின் பிள்ளை.*

*தேசபக்தியுள்ள ஒவ்வொரு யூதனும் வரிகட்டுவதற்கு தங்கள் மனதை திடப்படுத்திக்கொண்டான். ஆனால் பேதுருவே மேசியாவாகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுடைய தேவ ராஜ்யத்திற்கு தெரிந்துகொள்ளப்பட்டவன். அதினால், தான் ரோம ராஜ்யத்திற்கு வரிகட்டுவதை விரும்பாமல் இருந்திருக்கக்கூடும்.*

*அவன் என்ன யோசிக்கிறான் என்று இயேசு புரிந்துகொண்டார். ஏனென்றால், அவனுடைய கேள்வி அவன் என்ன யோசிக்கிறான் என்பதை பிரதிபலித்தது.*

***மத்தேயு 17:26, அதற்குப் பேதுரு: அந்நியரிடத்தில் வாங்குகிறார்கள் என்றான். இயேசு அவனை நோக்கி: அப்படியானால் பிள்ளைகள் அதைச் செலுத்தவேண்டுவதில்லையே.***

*இது பேதுருக்கு சற்று குழப்பமாய் தெரிந்திருக்கலாம். ராஜாவின் பிள்ளைகள் வரிசெலுத்த வேண்டியதில்லை என்று*

*இயேசு சொல்லும்போது அவர் அவனுக்கு ஆதரவாய் பேசுகிறார் என்று எண்ணியிருக்கக்கூடும்.*

*நீங்கள் வரிகட்டுகிறவர்களாயிருந்து, மற்றவர்கள் வரி கட்டாததை அறியும்போது அது உங்களை பாதிக்கிறதா?*

*பேதுரு தன் பாடத்தைக் கற்றுக்கொள்ளுகிறான்.*

*பேதுருவை சிந்தையில் வைத்து, பேதுருவின் நிருபங்களை தயவாய் வாசியுங்கள். சுவிசேஷத்தில் இடம்பெறும் பேதுருவுக்கும், நிருபம் எழுதிய பேதுருவுக்கும் வித்தியாசம் இருப்பதைப் பார்க்க முடியும். இந்த மனிதன் ஓர் பெரிய மறுரூபமாக்கும் அனுபவத்திற்கு நேராய் நடந்திருக்கிறான் என்பதே அந்த வித்தியாசத்திற்கான காரணம்.*

*பேதுரு தனக்கு சற்றும் அறிமுகமில்லாத அந்நியர்களுக்கும் பரதேசிகளுக்கும் நிருபம் எழுதுகிறான் என்பதை வெளிப்படுத்துகிறான். ரோம சாம்ராஜ்யம் முழுவதும் சிதறிக்கிடந்த விசுவாசிகளுக்கு எழுதுகிறான். நீங்கள் அனைவரும் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிறீர்கள். இந்த பூமிக்கு சொந்தமானவர்கள் இல்லை.*

***1 பேதுரு 2:11-12, பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்சஇச்சைகளை விட்டு விலகி, புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.***

*மற்றவர்கள் தங்களையும் சுவிசேஷத்தையும் குற்றப்படுத்தாத வகையில் வாழும்படிக்கு பேதுரு அவர்களுக்கு*

*புத்திசொல்லுகிறார். அவர்கள் மனப்பூர்வமாய் உங்களை குற்றப்படுத்தமுடியாது.*

***அதை நீ எப்படி செய்வாய்?***

***1 பேதுரு 2:13-14, நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர்நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமைசெய்கிற வர்களுக்கு ஆக்கினையும் நன்மைசெய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி, கீழ்ப்படியுங்கள்.***

*அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு கீழ்ப்படியுங்கள், ராஜாவிலிருந்து அதிகாரிகள் வரை எல்லோருக்கும் கீழ்ப்படியுங்கள்.*

*உங்கள் வரிகளைச் செலுத்துங்கள். எது சரியோ அதைச் செய்யுங்கள்.*

*பேதுரு அடிபணியக் கற்றுக்கொண்டான் என்று உறுதியாய் சொல்லலாம்.*

***1 பேதுரு 2:15-17, நீங்கள் நன்மைசெய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. சுயாதீனமுள்ளவர் களாயிருந்தும், உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமை களாயிருங்கள். எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள்.***

*நீங்கள் விடுதலையாக்கப்பட்டவர்கள்.*

*நீங்கள் மனித சட்டங்களுக்கும் மாம்ச ராஜ்யங்களுக்கும் விடுதலையாக்கப்பட்டவர்கள்.*

*ஆனால் அதைப் பயன்படுத்தி உங்கள் பேராசையை மறைக்காதீர்கள். தேவனை மகிமைப்படுத்துவதற்கு எது சரியோ அதைச் செய்யுங்கள்.*

*சர்வாதிகாரம்கொண்ட, அழுத்தம் தரக்கூடிய, கடினமான, வெளிப்படையான, உயர்ந்த ஒரு தலைவர் மற்றவர்களுக்கு கீழ்படிவது என்பது கடினமான ஒரு காரியம்.*

*ஒரு நல்ல தலைவன், புறஜாதி மற்றும் உலக அதிகாரங்களுக்கும் கீழ்படியக் கற்றுக்கொண்டவன். அங்கே கீழ்படியப் பழகும்போது, தேவனிடத்திலிருந்து வருகிறவைகளுக்கு நீ கீழ்ப்படியப் பழகிக் கொள்ளலாம்.*

## *2. சுய ஒழுக்கம்*

*தலைவர்களின் கோபம் என்பது தலைமைத்துவத்தின் ஒரு அம்சம்.*

*இன்றைய உலகில் தலைவர்களுக்கு இருக்கக்கூடிய மிக முக்கியப் பிரச்சனைகளில் ஒன்று, கோபம்.*

*"சினம் தவிர்த்தல்" என்னும் இயக்கம் இன்று பிரசித்திப்பெற்றிருக்கிறது.*

*பெரிய தலைமைத்துவ பொறுப்புகளில் இருக்கும் நிறுவன மேலதிகாரிகளுக்கு கோபத்தைக் கட்டுப்படுத்தும் இந்த பாடம் அவசியப்படுகிறது. அவர்களுக்கு பெருமளவில் கோபம் வரக்கூடும். நிர்வாக அதிகாரம், அரசு குறுக்கீடுகள், அரசாங்க சட்டம், வரி, விதிமுறைகள், மனிதவளப் பிரச்சனைகள், அரசியல் திருத்தங்கள் போன்ற பல்வேறு காரியங்களால் அவர்கள் கோபமடைவதுண்டு.*

*தலைவர்கள், "இது என் கனவு" என்று சொல்லத்தக்க பாதையில் பயணிக்கிறார்கள்.*

*நவீன வாழ்க்கையில் ஒவ்வொரு சுவர்களையும் உதைக்கவேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகவேண்டியிருப்பதால், அதிக கோபத்திற்கு உட்படவேண்டியிருக்கிறது.*

*நீங்கள் யாரையும் திட்டமுடியாது.*

*மற்றவர்களைக் குறித்த உண்மையை மனந்திறந்து சொல்லமுடியாது.*

*ஒருவரிடத்தில் ஏதோ குறையுள்ளது என்பதை வெளிப்படையாய் மற்றவர்களிடத்தில் பகிர்ந்துகொள்ளமுடியாது.*

*இந்த பிரச்சனைகள் எல்லாவற்றையும் சந்திக்கவேண்டியுள்ளது.*

*நீ போக வேண்டிய இடத்திற்கு போக முடியாது. விரக்தி படிப்படியாய் அதிகரிக்கும். எனவே உங்கள் கோபத்தைக் கட்டுப்படுத்தும் ஆலோசனையைக் கொடுக்க இன்னொரு நபரின் உதவி தேவைப்படும்.*

*அந்த அறையில் உள்ள எல்லோரும் பைத்தியங்கள்.*

*கருத்தரங்கு முடிந்தவுடன், கோபத்தை கட்டுப்படுத்தவதைக் குறித்து கற்றுக்கொடுத்த நபர் மீது கோபப்படத் தூண்டுகிறது. அவரை மறுபடியும் கூப்பிடவே கூடாது. அவருக்கு பிரச்சனை என்னவென்று புரியவில்லை.*

*அதினால்தான் திருமணங்கள் உடைகிறது.*

*அவர்கள் தங்கள் வீட்டிற்கு கோபத்தோடு திரும்பும்போது தங்கள் அலுவலகத்தைப்போன்று மனைவியினிடத்திலும் கோபப்படுகின்றனர்.*

*கோபம் முக்கியமான பங்கு வகிக்கிறது.*

*பேதுருவுக்கும் அதே தான் நிகழ்கிறது!*

*ரோமப் போர்ச்சேவகர்களையும் சேர்த்து 500க்கும் மேற்பட்டோர் கெத்சமனே தோட்டத்தில் இயேசுவை கைதுசெய்ய வருகின்றனர். இயேசுவை அவர்கள் கைதுசெய்யப்போகிறார்கள். இயேசுவை அவர்கள் கைதுசெய்யப்போகிறார்கள் என்பதை கேள்விப்பட்ட மாத்திரத்தில் பேதுரு கோபப்பட்டு தன் பட்டயத்தை எடுத்து சுழற்றுகிறான்.*

*பிரதான ஆசாரியனின் வேலைக்காரன் மல்குஸ் முன்பாக நிற்கிறான். பட்டயத்தை அவன் தலையை நோக்கி சுழற்றுகிறான். அவன் சற்று குனிந்ததால் அவனுடைய காது துண்டானது. ஒரு காதுள்ளவனாய் அந்தக் கூட்டத்தில் நின்றுகொண்டிருக்கிறான். இது பகுத்தறிவான செயல் அல்ல.*

*அவர்கள் திறமையான யுத்த வீரர்கள். தேவன் அந்த காதை எடுத்து மல்குஸ்க்கு ஒட்டவைக்கிறார். அந்த சம்பவம் மக்களுக்குள் குழப்பமான விவாதங்களை ஏற்படுத்தியிருக்கலாம் என்று நீங்கள் நினைக்கலாம். நிச்சயமாய் இல்லை. அவர்கள் உறுதியான மனநிலையில்தான் இருந்தார்கள்.*

***யோவான் 18:10-11, அப்பொழுது சீமோன்பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்; அந்த வேலைக்காரனுக்கு மல்குஸ் என்று பெயர். அப்பொழுது இயேசு பேதுருவை நோக்கி: உன் படடயத்தை உறையிலேபோடு; பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ என்றார்.***

*பேதுரு அந்தத் தருணத்தில் பொருமையிழந்துவிட்டான். மிகுந்த கோபத்துடன் அங்கு என்ன செய்வதென்று பகுத்தறியமுடியாமல் செயல்படுகிறான். தன்னைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பதை அவன் கற்றுக்கொள்ளவேண்டும்.*

*பேதுரு கற்றுக்கொண்டான்!*

***1 பேதுரு 2:21, இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.***

*சிலவேளைகளில் நாம் உபத்திரவப்பட்டாக வேண்டும். சிலவேளைகளில், நாம் கைதுசெய்யப்பட வேண்டும். சிலவேளைகளில் நாம் சிறைக்குள் அடைக்கப்பட வேண்டும்.*

*சிலவேளைகளில் நாம் கொலை செய்யப்பட வேண்டும்.*

*இயேசு உபத்திரவப்பட்டு இந்த பாதையின் ஊடாய் கடந்துபோனதினிமித்தம் ஒரு மாதிரியை வைத்துப்போயிருக்கிறார் என்று பேதுரு சொல்லுகிறான்.*

*பேதுரு தீர்க்கதரிசன வார்த்தையாகிய ஏசாயா 53:9ஐ இங்ஙனம் மேற்கோள் காட்டுகிறார்.*

***1 பேதுரு 2:22, அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை.***

*சிலவேளைகளில் நீங்கள் தவறுசெய்யாமல் இருந்திருக்கலாம். ஆனால் நீங்கள்...*

- *இழிவுபடுத்தப்படலாம்,*

- *தடைசெய்யப்படலாம்,*
- *சிறையிலடைக்கப்படலாம்,*
- *சித்திரவதை செய்யப்படலாம்,*
- *உபத்திரவப்படலாம்.*

*இயேசுவைப்போலவே.*

***1 பேதுரு 2:23-25, அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்.***

*இயேசு தன்னை தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்திருந்தார்.*

*இந்தச் சூழ்நிலை உங்களுக்கு நன்றாய் தெரியும். இது நியாயமல்ல. இது சரி கிடையாது. இது நீதியல்ல, இது எனக்கு நேரிடக்கூடாது, இது எனக்கு நேரிடுவதற்கு நான் எந்த தவறும் செய்யவில்லை.*

*பிதாவே, இது எப்படியிருந்தாலும், நான் எதிர்த்துப் பேசுவதில்லை. அவர்களை பயமுறுத்தமாட்டேன். என் ஆத்துமாவை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கிறேன்.*

*இதுவே நற்சிந்தை.*
*சிலவேளைகளில் ஒரு தலைவருக்குள் இந்த சிந்தை உருவாவது மிகவும் கடினம்.*

*ஜனங்கள் தன் பட்டத்தை உருவி எதிரியை வீழ்த்துவதற்கே விரும்புகின்றனர்.*

## *3. தாழ்மை*

*தங்களை மக்கள் பின்பற்றுவதினால் உலகத் தலைவர்கள் பெருமை கொள்வது இயல்பு.*

*மக்கள் அவர்களை புகழ்கின்றனர்.*
*மக்கள் அவர்களை நோக்குகின்றனர்.*
*மக்கள் அவர்களால் ஈர்க்கப்படுகின்றனர்.*
*பேதுருவுக்கு மட்டுமல்லாது, தலைவர்கள் எல்லோருக்குமே சுயத்தின் மீதான நம்பிக்கை சற்று அதிகமாகவே உள்ளது.*

***மத்தேயு 26:33-35, பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: உமதுநிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன் என்றார். இயேசு அவனை நோக்கி: இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்குப் பேதுரு: நான் உம்மோடே மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன் என்றான்; சீஷர்கள் எல்லாரும் அப்படியே சொன்னார்கள்.***

*அதிகப்படியான பெருமை, சுய நம்பிக்கை.*

*தான் மறுதலிக்கவே மாட்டேன் என்று சொன்ன மாத்திரத்திலேயே மூன்று வெவ்வேறு சூழ்நிலைகளில், மூன்று வெவ்வேறு இடங்களில் இயேசுவை மறுதலிக்கிறான்.*

*அவன் தன்னை நம்புவதை தவிர்க்கப் பழகவேண்டும்.*
*அவன் பெருமைப்படுவதை தவிர்க்கப் பழகவேண்டும்.*

*அவன் தன்னுடைய நிருபத்தை இப்படியாக எழுதுகிறான், பாருங்கள்.*

***1 பேதுரு 5:2-6, உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.***

***பேதுருவுக்கு இது பெரிய மாற்றமில்லையா?***

*பேதுரு சொல்லுகிறான்,*
*மூப்பர்களும் போதகர்களும் தாழ்மையாயிருப்பதற்கு கற்றுக்கொள்ள வேண்டும்.*
*மூப்பர்களுக்கு கீழ்ப்படியுங்கள்.*
*ஒருவருக்கொருவர் கீழ்ப்படியுங்கள்.*

*தேவனுடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.*

## *4. அன்பு*

*பேதுரு அன்பையும் கற்றுக்கொள்கிறான்.*

*உலகத் தலைவர்கள் பொதுவாக அன்பு காட்டுவதில்லை. மக்களை தங்களுக்கு சாதகமாய் பயன்படுத்திக்கொள்வார்கள். தங்கள் இலக்கை அடைவதற்கு மக்களை எங்கு நிறுத்துவது அவசியமோ அங்கே நிறுத்துவார்கள். திருச்சபைகளிலும் சதுரங்க விளையாட்டிலும் காய்களை நகர்த்துவதுபோல, தங்களுடைய தேவைக்கேற்ப மக்களை அவ்வப்போது பயன்படுத்துவது வழக்கம்.*

*தலைவர்கள் பொதுவாக மக்களைவிட இலக்கைத் தான் குறிவைப்பார்கள்.*

*மக்களை உழுது தங்கள் இலக்கை அடைந்துகொள்வார்கள்.*

*பேதுரு மக்களை நேசிக்க பழகவேண்டும். தேவன் அதை அவனுக்கு கற்றுக்கொடுக்கிறார்.*

*காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே இயேசுவுக்கும் சீஷர்களுக்கும் இடையில் ஓர் அழகான சம்பவம் நிகழ்கிறது.*

***யோவான் 13**இல் பஸ்காவை ஆசரிக்கும்பொருட்டு அவர்கள் மேல்வீட்டில் பந்தியை அனுசரிக்க கூடியிருந்தனர். அவர்கள் எருசலேமிருந்தனர். இயேசு யூதாஸினால் அன்றிரவு காட்டிக்கொடுக்கப்படப் போகிறார். அதைத் தொடர்ந்து, கைதுசெய்யப்படப் போகிறார்.*

*அவர்கள் இரவுப் பந்திக்கு கூடியிருந்தனர். அது வெகுநேரம் செல்லக்கூடிய ஒரு நிகழ்வு. வெகுநேரம் செல்லக்கூடிய பந்தி என்பதினால் அவர்கள் சாய்ந்து உட்கார்ந்திருக்க ஒருவரின்*

*தலை மற்றவர்களின் கால்மாட்டிற்கு குனிகிறது. அந்த நாட்களில் மணல் சாலைகள் என்பதினால் கால்களில் அதிக தூசுகள் படிந்திருக்கும்.*

*அந்நாட்களின் வழக்கப்படி, இதுபோன்ற பந்திக்கு ஒரு வீட்டிற்கு செல்லும்போது, வீட்டிலுள்ள வேலைக்காரர்களை வைத்து விருந்தினர்களின் பாதங்களை கழுவுவது வழக்கம். யாரும் விரும்பாத ஒரு செய்கை.*

*ஆனால் அங்கே அடிமை யாருமில்லை. அதைச் செய்வதற்கும் யாரும் தயாராகவும் இல்லை. ஆகையினால் சாப்பிட ஆயத்தமானார்கள். அந்த சூழ்நிலைக்கு பாதங்களை கழுவுவது பொருந்தாது என்பதால், அங்கு அது நடைபெறவில்லை. அதினால் யாரும் அதை செய்யவில்லை.*

***யோவான் 13:4-6, போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார். அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது, அவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான்.***

*அடிமையிலும் அடிமையின் ஸ்தானத்தை இயேசு அங்கே தேர்ந்தெடுக்கிறார். அப்போஸ்தலர்களின் அழுக்கான பாதங்களை கழுவுகிறார்.*

***அவர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்?***

*மற்ற பதிவுகளோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது, அவர்களில் யார் சிறந்தவர்கள் என்பதைக் குறித்து விவாதித்துக்கொண்டிருந்தார்கள் என்பது தெரியவருகிறது.*

*தங்களில் யார் பெரியவன் என்று விவாதிக்கிற சூழ்நிலையில் யாரும் அடிமையின் ஸ்தானமெடுத்து கால்களை கழுவப்போவதில்லை. அவர் ஒவ்வொருவரும் தாங்கள் உயர்ந்தவர்கள் என்பதை மற்றவருக்கு நம்பச்செய்துகொண்டிருந்தார்களே தவிர, தாழ்த்துவதற்கு தயாராகவில்லை.*

*சுயபெருமைக்கும், சுயமேன்மைக்குமான அந்தப் போராட்டத்தின் மத்தியில், யாரும் செய்யாததை இயேசு செய்கிறார்.*

*இயேசு சீமோன் பேதுருவிடத்தில் வந்தபோது, அங்கே அமைதி நிலவியிருந்திருக்கும் என்று நாம் கற்பனை செய்யமுடியும். அவர் என்ன செய்கிறார் என்பதைக் குறித்து அனைவரும் மலைத்துப் போயிருந்தனர்.*

***நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?***

*துணிச்சலும் ஆர்வமும் கொண்ட பேதுரு மறுபடியும் பேசத் துவங்குகிறான்.*

***யோவான் 13:7-8, இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இன்மேல் அறிவாய் என்றார். பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றான்.***

*இந்த வாக்கியங்களெல்லாம் பேதுருவின் பிரபல வாக்கியங்கள்.*

*நான் உம்மை மறுதலிக்கமாட்டேன்.*

*நான் முதலில் மரிப்பேன்.*

*நீர் என் கால்களை கழுவலாமா?*

*பேதுருவின் வாழ்க்கையில் மங்கலான நிறமே இல்லை. எல்லாமே கருப்பு வெள்ளை தான்.*

***யோவான் 13:9, அதற்குச் சீமோன் பேதுரு: ஆண்டவரே, என் கால்களைமாத்திரமல்ல, என்கைகளையும் என் தலையையும்கூடக் கழுவவேண்டும் என்றான்.***

*பேதுருவுக்கு நடுநிலை என்பதே இல்லை.*

*இயேசு அவன் கால்களை கழுவுகிறார்.*

***யோவான் 13:10, இயேசு அவனை நோக்கி: முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்.***

*இது ஒருவகையான ஆவிக்குரிய அடையாளம்.*

*இங்கே நடந்த இந்த சம்பவத்தின் விளைவு 34, 35 வசனங்களில் தெரிகிறது.*

***யோவான் 13:34-35, நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.***

***அவர்கள் எதைக் குறித்து விவாதித்தார்கள்?***

***அவர்களில் யார் பெரியவன்?***

*யார் சிறந்தவன் என்பதைக் குறித்து விவாதம் பண்ணினார்கள்.*

*சுயநலவாதிகள்.*

***இயேசு அவர்களை எப்படி நேசித்தார்?***

*அவர்களின் பாதங்களைக் கழுவினார்.*

*உன்னை எவ்வளவு தாழ்த்தமுடியுமோ, அந்த அளவிற்கு தாழ்த்தி, உன்னையே தியாகம் செய்து மற்றவர்களின் தேவையை சந்திக்க முற்றிலும் தாழ்த்துவதே அன்பு.*

*நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும்.*

*பெயர் பிரஸ்தாபத்திற்காக ஒருவரோடொருவர் மோதிக்கொள்ளக்கூடாது.*

*தங்களுக்கு கீழான ஸ்தானத்திலிருக்கிறவர்களின் கால்களைக் கழுவுவது தலைவர்களுக்கு கடினமான ஒன்று.*

***பேதுரு அன்புகூரக் கற்றுக்கொண்டானா?***

*ஆம்! கற்றுக்கொண்டான்.*

***1 பேதுரு 4:8, எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்.***

*எல்லோரிடத்திலும் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருக்கும்படிக்கு பேதுரு கட்டளையிடுகிறார். எல்லாவற்றிற்கும் மேலான அன்பை எதிர்பார்க்கிறார்.*

*ரோம சாம்ராஜ்யத்தில் பரவிக்கிடக்கும் முகம் தெரியாத விசுவாசிகளுக்கு ஒருவரையொருவர் நேசியுங்கள் என்று*

*நிருபம் எழுதுவதற்கு முன்னரே பேதுரு அதைக் கற்றுக்கொண்டான்.*

## *5. இரக்கம்*

*பேதுரு மறுதலித்தபோது, தேவன் பேதுருவைப் பார்த்து மற்றவர்களை ஸ்திரப்படுத்தும்படி சொல்லுகிறார்.*

***லூக்கா 22:31-32, பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்.***

***இது எதைக் குறித்தது?***

*இரக்கம் காட்டுவதிலோ அல்லது மற்றவர்களை தேற்றுவதிலோ தலைவர்கள் குறைவுள்ளவர்கள்.*

*அவர்கள் இலக்கை நோக்கி நகர்கிறவர்கள். நோக்கத்தோடே ஓடுகிறவர்கள். ஒரு வளர்ச்சியை நோக்கியே பயணிக்கிறவர்கள். நின்று மற்றவர்களுக்கு இரக்கம்காட்டுவதற்கு அவர்களுக்கு அவகாசம் இருக்காது.*

*பேதுரு இரக்கத்தை கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாயிருந்தது.*

***பேதுரு சோதிக்கப்படுவதற்கு இயேசு ஏன் அனுமதித்தார்?***

*எனெனில், சோதனையை தாண்டிவிட்டால், நீ உன் சகோதரரை ஸ்திரப்படுத்த தகுதிப்பட்டுவிடுவாய்.*

*உன் வாழ்க்கை முழுவதும் துன்பப்படுகிற மக்கள் மீது இரக்கம் காண்பிக்கமுடியும். தாங்கள் இருக்கிற ஆவிக்குரிய*

*நிலையைக் காட்டிலும் மிஞ்சி எண்ணிக்கொண்டிருந்த மக்கள் மீது பேதுரு இரக்கப்படுகிறார்.*

*சோதனைகளோடு போராடி களைத்து, சந்தேகத்திலும் பாவத்திலும் விழுந்துபோயிருந்த மக்களிடம் பேதுரு இரக்கப்படுகிறார்.*

*பாவத்தோடு போராடிக்கொண்டிருக்கிறவர்களிடம் இரக்கமுள்ளவர்களாய், இளகிய உள்ளங்கொண்டவர்களாய், கிருபையுள்ளவர்களாய், தயவாய் நடந்துகொள்ளவேண்டியுள்ளது.*

*தாங்கள் பாவமே செய்யாததுபோல, பாவத்தில் விழுந்தவர்களை பாடுபடுத்தும் சுயநீதிக்காரர்களை நாம் வெறுக்கிறோம். ஆனால் பேதுரு, சிறந்த வனாயிருந்தாலும் நேர்மையானவனாயிருந்தாலும், அவன் உடைக்கப்படவேண்டியது அவசியம் என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது. ஏனென்றால் அவன் உடைக்கப்படப் போகிறான்.*

***1 பேதுரு 5:7-10, அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே. கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவராக.***

***அது பேதுருவுக்கு எப்படித் தெரியும்?***

*அவன் அங்கே இருக்கிறான்!*

*மனிதனுடைய பெலவீனங்களை புரிந்துகொள்ளுகிற ஒரு தலைவன் இவன்.*

*தன்னை அடிமட்டும் தாழ்த்துகிற ஒரு தலைவன் இவன்.*

*தன்னுடைய பெலவீனங்களை முகத்தில் காண்பிக்காமல், ஆண்களும் பெண்களும் கடந்து போகிற பாதையை அறிந்துகொள்கிற தலைவன் இவன்.*

## *6. துணிச்சல்*

*எதிர்ப்புகளை சந்திக்கவேண்டியிருப்பதால் ஆவிக்குரிய தலைவர்கள் துணிச்சலுள்ள தைரியசாலிகளாய் இருப்பது அவசியம்.*

*இருளின் ராஜ்யம் ஒளியின் ராஜ்யத்திற்கு எதிர்த்து நிற்கிறது.*

*பொய்கள் சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிறது.*

*சாத்தான் தேவனை எதிர்த்து நிற்கிறான்.*

*பிசாசுகள் கிறிஸ்துவின் பரிசுத்த நோக்கத்தை எதிர்த்து நிற்கிறது.*

*நீ போகும்போது உனக்கு துன்பங்கள் இருக்கப்போகிறது.*

*யோவான் 21இல் பேதுருவை இயேசு கலிலேயா கடலிலிருந்து மீட்கும்போது அவனிடம் சொல்லுகிறார்:*

*"என் ஆடுகளை போஷிப்பாயாக,"*

*"என் ஆடுகளை மேய்ப்பாயாக,"*

*“என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக”*

*நீ எனக்காக மரிக்கப்போகிறாய்.*

*துருவே, உன்னுடைய பிரசங்கத்திற்கான விலை உன்னுடைய இரத்தசாட்சி. ஆகையினாலே பேதுரு தன்னை தைரியப்படுத்திக்கொள்ளப் போகிறான்.*

*பேதுரு அதிக துணிச்சலை வெளிப்படுத்தியதில்லை.*

*பல்வேறு மக்களுக்கு முன்பாக இயேசுவை யாரென்று தெரியாது என்று மறுதலிக்கிறான். அவனுக்கு துணிச்சல் இல்லை.*

*ஆனால் அப்போஸ்தலர் நடபடிகளில் பார்க்கும்போது வேறொரு ஆச்சரியமான காரியம் நிகழ்கிறது.*

*அப்போஸ்தலர் 4இல், பேதுருவும் யோவானும் யூதர்களின் ஆளும் வர்க்கமான ஆலோசனை சங்கத்திற்கு முன் நிறுத்தப்படுகின்றனர். ஆலோசனை சங்கம் அவர்களைப் பார்த்து, இயேசுவின் நாமத்தில் நீங்கள் பேசக்கூடாது என்றனர்.*

***அப்போஸ்தலர் 4:18-20, அவர்களை அழைத்து: இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட் டார்கள். பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே என்றார்கள்.***

*பேதுரு இதனை வெகு சுலபமான தீர்மானம் என்கிறார்:*

*நாங்கள் உமக்கு செவிகொடுக்க வேண்டுமா அல்லது தேவனுக்கா?*

*பேதுரு துணிச்சலாய் முன்வந்து பிரசங்கிக்கிறான்.*

*அதிகாரத்திற்கு கீழ்ப்படியாமல் அவர்கள் பிரசங்கித்ததினால், அப்போஸ்தலர் 5இல் மீண்டும் அவர்கள் ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக கொண்டுவரப்படுகின்றனர். மீண்டும் அவர்கள் எச்சரிக்கப்படுகின்றனர். இதை மீண்டும் நீங்கள் செய்யக்கூடாது.*

**அப்போஸ்தலர் *5:29,* அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது.**

*ஆவிக்குரிய தலைவனுக்கு இந்த விதமான துணிச்சல் அவசியமாயிருக்கிறது.*

*பேதுரு வளைந்துகொடுக்கிறவனல்ல.*

*அவன் மனதை அலைபாயவிடுகிறவனல்ல.*

*அவன் தைரியமானவன்.*

*இதுபோன்ற குணாதிசயங்கள் பேதுருவை தேவன் எதிர்பார்க்கும் மனிதனாகவும், சீமோனாயிருந்தவனை அஸ்திபாரக் கல்லாகவும் மாற்றியது.*

*தேவனிடத்திலிருந்தும் பரிசுத்த ஆவியின் கிரியையின் நிமித்தமும், கீழ்ப்படிதல், சுயக் கட்டுப்பாடு, தாழ்மை, அன்பு, இரக்கம், தைரியம் போன்ற குணாதிசயங்களை பேதுரு கற்றுக்கொண்டான்.*

**பேதுரு நேர்த்தியான மனிதனா?**

*இல்லை.*

*கலாத்தியர் 2. கலாத்தியர் 2இல் அவர் என்ன செய்கிறார் என்பது நமக்குத் தெரியும்.*

*விகர்ப்பமான ஒரு காரியத்தை பேதுரு செய்கிறான். மாய்மாலம் பண்ணுகிறான்.*

*மாய்மாலம்பண்ணுகிறவனாய் செயல்படுகிறான். அவன் புறஜாதிகளோடே உட்கார்ந்து சாப்பிடுகிறான்.*

*அந்தியோகியாவில் புறஜாதிகளோடு உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது விருத்தசேதனம் செய்யப்பட்ட சில யூதர்கள் வருகின்றனர். அவன் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு அவர்களை பிரியப்படுத்த முயற்சிக்கிறான்.*

*பவுல் கலாத்தியரில், "நான் முகமுகமாய் அவனோடே எதிர்த்தான்" என்று சொல்லுகிறார். பேதுருவே அது தவறு. பேதுரு பவுலினாலும் கடிந்துகொள்ளப்பட்டார்.*

***கலாத்தியர் 2:11-13, மேலும், பேதுரு அந்தியோகியாவுக்கு வந்தபோது, அவன்மேல் குற்றஞ் சுமந்ததினால், நான் முகமுகமாய் அவனோடே எதிர்த்தேன். எப்படியெனில், யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே அவன் புறஜாதியாருடனே சாப்பிட்டான்; அவர்கள் வந்தபோதோ, விருத்தசேதனமுள்ளவர்களுக்குப் பயந்து விலகிப் பிரிந்தான். மற்ற யூதரும் அவனுடனேகூட மாயம்பண்ணினார்கள்; அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டான்.***

*பேதுரு மாய்மாலம் பண்ணியபோது, அவனைக் கண்டு மற்றவர்களும் அப்படியே செய்தனர். ஏனென்றால், அவன் தலைவன்.*

*பின்பற்றுவதற்கு ஆட்கள் இருப்பதால், தலைவர்கள் சரியானதை செய்வதற்கு மிகவும் கவனமாயிருக்கவேண்டியது அவசியம். பேதுரு நேர்த்தியானவன் இல்லை. ஆனால் பவுலின் திருத்துதலுக்கு செவிகொடுத்தான்.*

*பேதுரு ஏன் அப்படி செய்தான் என்று தெரியவில்லை. ஒருவேளை வீண் குழப்பம் எதற்கு என்று யோசித்திருக்கலாம். ஆனால் அவன் நேர்த்தியானவனில்லை. கலாத்தியர் 2ஆம் அதிகாரத்தில் அது தெளிவாய் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு பின்பு அவனுடைய வாழ்க்கை மிக நேர்த்தியாகவே இருந்திருக்கவேண்டும்.*

*பேதுரு எழுதின கடைசி நிருபத்தின் கடைசி வார்த்தைகள் அவனுடைய வாழ்க்கையை பிரதிபலிக்கிறது. அவன் எழுதுகிறான், "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்."*